சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் செயல்முறைகள் சென்னை-08

ந.க.எண். 844 0/ஆ6/2023, நாள். 04 .11.2023

பொருள் அரசு/சென்னை/ஆதிதிராவிட நல பள்ளிகள்- ARR Project- அடையார் ஆற்றுப்படுகை குடியிருப்பு பகுதிகளிலிருந்து பெரும்பாக்கம் மறு குடியமர்த்தப்பட்ட பகுதியின் மாணவர்களை அருகாமையிலுள்ள பள்ளிகளில் சேர்க்க அறிவுறுத்தியது- சேர்க்கப்பட்ட மாணவர்களின் விவரம் - தலைமையாசிரியரிடம் கோருதல் - தொடர்பாக.

பார்வை சென்னை-08, முதன்மைக் கல்வி அலுவலர் செயல்முறைகள் ந.க.எண். 844 0/ஆ6/2023, நாள். 30 .10 .2023

.....

அரசு/சென்னை/ஆதிதிராவிட நல பள்ளிகளில் ARR Project அடையார் ஆற்றுப்படுகை குடியிருப்பு பகுதிகளிலிருந்து, பெரும்பாக்கம் மறுகுடியமர்த்தப்பட்ட பகுதிகளில் இருந்து மாணவர்கள் சேர்க்கை வேண்டி அருகாமையிலுள்ள சோழிங்கநல்லூர், பெருங்குடி, ஒக்கியம் துரைப்பாக்கம், கண்ணகி நகர், காரப்பாக்கம் பள்ளி தலைமையாசிரியர்களை அணுகும் போது எவ்வித மறுப்புமின்றி சார்ந்த மாணவர்களின் கல்வி பாதிக்காதவாறு வகுப்பிற்கு ஏற்ப சேர்க்கை வழங்குமாறு பார்வை 1-ல் காணும் கடிதத்தில் வாயிலாக தலைமை ஆசிரியர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இது சார்ந்து 2023-2024 ஆம் கல்வியாண்டில் 01.09.2023 முதல் நாளது தேதி வரை அடையார் ஆற்றுப்படுகை குடியிருப்பு பகுதிகளிலிருந்து, பெரும்பாக்கம் மறுகுடியமர்த்தப்பட்ட பகுதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்ட குடும்பங்களில் இருந்து பள்ளி செல்லும் குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் விவரங்களை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 07.11.2023 **செவ்வாய்கிழமை அன்று மதியம் 12.00 மணிக்குள்** இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
2. சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள்.

நகல்

சென்னை-03, பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி அலுலவர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.

அடையார் ஆற்றுப்படுகை குடியிருப்பு பகுதிகளிலிருந்து பெரும்பாக்கம் மறு குடியமர்த்தப்பட்ட பகுதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்ட குடும்பங்களிலிருந்து பள்ளி செல்லும் குழந்தைகளை 01.09.2023 முதல் நாளது தேதி வரை சேர்க்கப்பட்ட மாணவர்களின் விவரம்

| வ.எண். | தற்போது பயிலும் பள்ளியின் பெயர் | மாணவர் பெயர் | வகுப்பு | சேர்க்கப்பட்ட நாள் | மாணவரின் தற்போதைய இருப்பிட முகவரி | முன்னர் பயின்ற பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

தலைமையாசிரியர் கையொப்பம்